**ஏப்ரல் – 11**

# தமிழ்நாடு செய்திகள்

## சூரிய ஆற்றலூட்டப்பட்ட கோழி வளர்ப்புக் காப்புப் பெட்டகம்

- தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் (விலங்கியல்) பல்கலைக் கழகமானது பனிமலர் பொறியியல் கல்லூரியுடன் இணைந்து சமீபத்தில் சூரிய ஆற்றலூட்டப்பட்ட கோழி வளர்ப்பு காப்புப் பெட்டகம் ஒன்றினை உருவாக்கியுள்ளது.
- இது கிராமப்புற மற்றும் சிறிய அளவிலான கோழிப் பண்ணையாளர்களுக்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- மின்னணு காப்புப் பெட்டகங்களில், மின்குறைபாடு அல்லது மின்தடை காரணமாக குஞ்சு பொரிக்கப் படும் திறன் (Hatchability) பாதிக்கப் படுவதை இதன் மூலம் தடுக்க முடியும்.

# தேசியச் செய்திகள்

## இந்தியா H2 கூட்டணி

- உலகின் முக்கிய ஆற்றல் மற்றும் தொழில்துறை அமைப்புகள் ஒன்றிணைந்து இந்தியா H2 கூட்டணி எனப்படும் ஒரு புதிய கூட்டணியை அமைத்துள்ளன.
- இக்கூட்டணியை அமைப்பதற்கான முன்னெடுப்பினை ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் மற்றும் சார்ட் இன்டஸ்ட்ரீஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தொடங்கியுள்ளன.
- இந்த இந்தியா H2 கூட்டணி (IH2A) முக்கியமாக ஹைட்ரஜன் தொழில்நுட்பங்களை வணிகமயமாக்குதலில் ஈடுபாடு செலுத்தும்.
- இது இந்தியாவில் ஹைட்ரஜன் சார்ந்த பொருளாதாரம் மற்றும் பொருள் வழங்கீட்டுச் சங்கிலி அமைப்புகளை ஊக்குவிப்பதற்காக பணியாற்றும்.

*முக்கிய நோக்கங்கள்*

- இந்தியாவில் ஹைட்ரஜன் சார்ந்த பொருளாதாரம் மற்றும் வழங்கீட்டு அமைப்பை உருவாக்குதல்.
- நீல மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்தல் மற்றும் சேமித்தல் போன்றவற்றை மேம்படுத்துதல்.
- ஹைட்ரஜன் பயன்படுத்தும் தொழிற்சாலைப் பகுதிகளை உருவாக்குதல்.
- ஹைட்ரஜனால் ஆற்றலூட்டப்பட்ட கலன்களால் இயங்கும் போக்குவரத்தினை அதிகரித்தல்.

## உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம்

- மத்திய அமைச்சரவை "White goods" (வெள்ளைப் பொருட்கள்) எனப்படும் மின்னணு சாதனங்களுக்கான (குளர்சாதனங்கள் மற்றும் LED பல்புகள்) உற்பத்தி ஊக்குவிப்பு (Production linked Incentive - PLI) திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இத்திட்டம் உலகளாவிய முதலீடுகளை ஈர்க்கும் எனவும், பெருமளவில் வேலை வாய்ப்பை உருவாக்கும் எனவும், ஏற்றுமதிகளை கணிசமான அளவில் மேம்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு 4% முதல் 6% வரையிலான ஊக்கத்

தொகையானது குளிர்சாதனங்கள் மற்றும் LED பல்புகள் போன்றவற்றின் தயாரிப்பில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு ஐந்து ஆண்டு காலத்திற்கு வழங்கப்படும்.




## அன்னமயா முன்னெடுப்பு

- ❖ மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சர் சமீபத்தில் "அன்னமயா" எனப்படும் பழங்குடியினர் கூட்டமைப்பைத் தொடங்கி வைத்துள்ளார்.
- ❖ பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சகத்துடன் இணைந்து சுகாதார மற்றும் குடும்பநலத் துறை அமைச்சகம் இந்த முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்த முன்னெடுப்பிற்கு பில் மற்றும் மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் பிரமல் அறக்கட்டளை ஆகியவை உதவி செய்யும்.
- ❖ இந்த முன்னெடுப்பின் முக்கிய நோக்கம் இந்தியாவில் வாழும் பழங்குடியினச் சமுதாயத்தினரின் சுகாதார மற்றும் ஊட்டச் சத்து முறையை மேம்படுத்துவதே ஆகும்.

## திரைப்படச் சான்றிதழ் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் – கலைப்பு

- ❖ இந்திய அரசானது ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் திரைப்படச் சான்றிதழ் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை (Film Certificate Appellate Tribunal - FCAT) கலைத்து உள்ளது.
- ❖ தீர்ப்பாயங்கள் சீர்திருத்தங்கள் (முறைப்படுத்துதல் மற்றும் சேவை விதிமுறைகள்) அவசரச் சட்டம், 2021 என்ற சட்டமானது திரைப்படச் சட்டம், 1952 என்ற சட்டத்தினைத் திருத்தி அமைக்கிறது.
- ❖ இச்சட்டம் அந்தச் சட்டத்தில் சில பிரிவுகளை நீக்கி மற்ற பிரிவுகளில் "தீர்ப்பாயம்" எனும் வார்த்தையை விடுத்து "உயர்நீதிமன்றம்" எனும் வார்த்தையை அதனுள் உள் நுழைத்து அச்சட்டத்தைத் திருத்தி அமைத்துள்ளது.
- ❖ இதன்படி, மத்திய திரைப்படத் தணிக்கை வாரியத்தின் (Central Board of Film Certification - CBFC) சான்றிதழை எதிர்த்து வழக்கிட வேண்டுமென்றாலோ அல்லது சான்றிதழ்

தரவில்லை என்றாலோ திரைப்படத் தயாரிப்பாளர்கள் இனி உயர்நீதிமன்றத்தை அணுக வேண்டும்.

# பொருளாதாரச் செய்திகள்

## உலக பொருளாதாரக் கண்ணோட்டம்

- சர்வதேச நாணய நிதியமானது தனது புதிய கண்ணோட்ட அறிக்கையில் இந்தியாவின் 2022 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி வீதமானது 12.5% ஆக இருக்கும் எனக் கூறியுள்ளது.
- இதன்மூலம் இந்தியா GDP வளர்ச்சியில் முதலிடத்தில் உள்ளது.
- மேம்பட்ட பொருளாதாரம் கொண்ட நாடுகளில் கூட 12.5% வளர்ச்சி என்பது மிக உயர்ந்ததாகும்.

**IN THE FAST LANE**

Growth forecast, in %

| | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|
| India | -8 | 12.5 | 6.9 |
| China | 2.3 | 8.4 | 5.6 |
| US | -3.5 | 6.4 | 3.5 |
| World | -3.3 | 6 | 4.4 |

**CONCERNS FOR EMERGING ECONOMIES**

- **Slower labour** force growth
- **Covid-19 protection** unavailable for most of the population in 2021
- **Frequent need** for lockdowns, containment measures
- **Protectionist tendencies** over tech emerging
- **Pharma protectionism** to impede global vaccine supply




## RXIL

- RXIL என்பது இந்திய வரவுகள் பரிமாற்றச் சந்தை ஆகும். (Receivables Exchange of India)
- சமீபத்தில் மாதாந்திர அளவான ரூ.1000 கோடியை கடந்த முதல் TREDS தளமாக RXIL தளம் உருவெடுத்து உள்ளது.
- இத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிமாற்றங்கள் (அளவில்) ஏப்ரல் 2020 ஆம் ஆண்டில் ரூ.69 கோடியிலிருந்து மார்ச் 2021 ஆம் ஆண்டில் ரூ.1,105 கோடி வரை அதிகரித்து உள்ளன.
- இது நாட்டின் பொருளாதார மீட்சியைக் குறிக்கிறது.
- மேலும் கோவிட்-19 பெருந்தொற்றினால் மோசமாக பாதிக்கப்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சி மீட்சியடைவதையும் இது குறிக்கிறது.

*குறிப்பு*

- RXIL 2016 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது இந்திய சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI) மற்றும் இந்திய தேசியப் பங்கு சந்தை லிமிடெட்டின் ஒரு கூட்டுக் குழுமமாகும்.
- இது TReDS' என்ற தளத்தினை இயக்குகிறது.

***TREDS***

- TREDS என்பது பல நிதி நிறுவனங்களிடமிருந்து சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு (MSME) நிதியளிக்க உதவும் ஒரு மின்னணு தொழில்நுட்பத் தளமாகும்.
- TREDS தளத்தில் உள்ள மூன்று முக்கிய பங்கேற்பு அமைப்புகள்,
    - சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (விற்பனையாளர்கள்)
    - நிதி வழங்குவோர் மற்றும்
    - கூட்டுறவு நிறுவனங்கள் (வாங்குபவர்) ஆகியனவாகும்.
- RBI வங்கியின் கூற்றுப்படி, சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மட்டுமே TREDS-தளத்தில் விற்பனையாளர்களாக பங்கேற்க இயலும்.

## மது கிராந்தி தளம் மற்றும் தேன் விற்பனை முனையங்கள்

- மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திரசிங் தோமர் அவர்கள் இந்தியாவில் தேன் உற்பத்தித் திட்டத்தை மேம்படுத்த மது கிராந்தி தளம் மற்றும் இந்தியாவின் தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தையிடல் கூட்டமைப்பின் (NAFED) தேன் விற்பனை முனையங்களைத் தொடங்கி வைத்தார்.
- மது கிராந்தித் தளமானது தேசிய தேனீக்கள் வாரியத்தின் முன்னெடுப்பாகும்.
- இது தேசிய தேனி வளர்ப்பு மற்றும் தேன் உற்பத்தித் திட்டத்தின் கீழ் இயக்கப் படுகிறது.

***மதுகிரந்தி தளம்***

- இத்தளமானது டிஜிட்டல் தளத்தில் தேனின் மூலப்பொருள் மற்றும் தேன் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றினைக் கண்டறிய உதவும்.
- மேலும் தேனின் தரம் மற்றும் தேனில் கலப்படம் செய்ய பயன்படுத்தப்படும் மூலத்தைக் கண்டறியவும் இத்தளம் உதவும்.
- தேன் உற்பத்தி, சந்தைப்படுத்துதல், தேனீ வளர்ப்பு மற்றும் விற்பனையில் ஈடுபடும் அனைத்துப் பங்குதாரர்களின் தகவல்களும் இத்தளத்தில் சேமிக்கப்படும்.

***தேன் விற்பனை முனையங்கள்***

- இவை தேன் விற்பனை செய்வதற்கான சிறப்பு முனையங்களாகும்.
- இது NAFED அமைப்பால் இயக்கப் படுகிறது.

***NAFED***

- NAFED என்பது இந்தியாவின் தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தையிடல் கூட்டமைப்பு (National Agricultural Cooperative marketing Federation) ஆகும்.
- NAFED 14 முதல் 15 வரையிலான தேன் விற்பனை முனையங்களை உருவாக்கி உள்ளது.
- மேலும் உருவாக்கப்பட உள்ள 200 முக்கிய NAFED கடைகளில், மேலும் பல தேன் விற்பனை முனையங்கள் உருவாக்கப்பட உள்ளன.

- இது தேன் விற்பனைக்கான சந்தை சார்ந்த உதவியை வழங்கும்.

*குறிப்பு*

- டிஜிட்டல் தளத்தை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப மற்றும் பங்குதாரர் வங்கி என்பது இந்தியன் வங்கியாகும்.
- இத்தளத்தை இயக்குவதற்காக தேசிய தேனீக்கள் வாரியத்துடன் இந்தியன் வங்கி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த சுகாதார தகவல் அமைப்பு

- மத்திய சுகாதார மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் ஒருங்கிணைந்த சுகாதார தகவல் அமைப்பினை காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.
- இது ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தின் (IDSP - Integrated Disease Surveillance Programme) மேம்பட்ட பதிப்பு ஆகும்.
- இத்துடன் மேம்பட்ட டிஜிட்டல் ரீதியிலான நோய் கண்காணிப்பு அமைப்பினை மேற்கொண்டுள்ள உலகின் முதல் நாடாக இந்தியா உருவெருத்துள்ளது.
- மேலும் (புவிசார் பரவல், கணக்கில் சேர்க்கப்பட்ட நோய்களின் எண்ணிக்கை மற்றும் உருவாக்கப்பட்ட தரவுகளின் அளவுகள் ஆகியவற்றின் அடிப்படையில்) இது உலகின் மிகப்பெரிய ஆன்லைன் நோய் கண்காணிப்பு தளமாகும்.
- தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவை இத்தளத்தை உருவாக்குவதில் இணைந்துள்ளன.
- இத்தளம் தேசிய டிஜிட்டல் சுகாதார திட்டத்துடன் ஒத்திசைந்து 'ஆத்ம நிர்பர் சுவதேஷ் பாரத்' எனும் இலக்கை அடைய உதவும்
- இத்தளம் 33 நோய்களைக் கண்காணித்து டிஜிட்டல் முறையில் நிகழ்நேர தரவுகளை வழங்கும் திறனுடையதாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## டெங்குவை விரைவில் கண்டறிதல்

- டெல்லி இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் மேற்பரப்பு மேம்படுத்தப்பட்ட இராமன் நிறப்பிரிவைச் சார்ந்த (SERS - Surface Enhanced Raman Spectroscopy) ஒரு கையடக்கமான கருவியை உருவாக்கியுள்ளனர்.
- இது டெங்குவை முன்கூட்டியே கண்டறிய உதவும்.
- மேலும் இது ஒரு மணிநேரத்திற்குள் டெங்கு சோதனை முடிவுகளை வழங்கும்.
- டெங்குவை முன்கூட்டியே கண்டறிதல் என்பது நோயாளியின் உடல்நிலை மோசமடைவதைத் தடுப்பதற்கான ஒரு முக்கிய காரணியாகும்.
- இதற்கான ஆராய்ச்சிக்கு கல்வி அமைச்சகத்தின் IMPRINT இந்தியா எனும் திட்டம் நிதி உதவி வழங்குகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★